# <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | |
|---|---|---|---|
| **Case No.** | **:** O.S.No. 22/2023 | **CNR No.** | **:** TNKI13-000018-2023 |
| **Name** | **:** கணபதி | **Father's Name** | **:** ராஜப்பன் |
| **Witness for** | **:** Plaintiff | **Calling** | **:** PW1 |
| **Age** | **:** 51 | **Village** | **:** செட்டிப்பட்டி |
| **Taluk** | **:** ஊத்தங்கரை | **District** | **:** கிருஷ்ணகிரி |
| **Start Time** | **:** 12:30 PM | **End Time** | **:** 01:10 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 07.11.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

<u>**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

(1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 ம் வகுப்பு படித்துள்ளேன். நான் ராணுவ பணியில் இருந்தேனா என்றால் ஆமாம் 17 ஆண்டுகளாக இருந்தேன். தற்போது என்ன செய்கிறேன் என்றால் பாரத வங்கியில் பணிபுரிகிறேன். வழக்கு சொத்தை வைத்து கல்லாவி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் கடன் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான், வாங்கி கட்டிவிட்டேன். என்ன ஆவணங்களை வைத்து கடன் வாங்கினேன் என்றால் கிரைய பத்திரம், சிட்டா, அடங்கல் ஆகியவை தாக்கல் செய்தேன். நான் கடன் வாங்கும் பொழுது வங்கிக்கு அடமான பத்திரங்களில் கடன் வாங்கினேன் என்றால் சரிதான். அந்த அடமாக கடன் பத்திரத்தில் எந்த சர்வே எண்ணில் எவ்வளவு நிலம் என்ன செக்குபந்தி என்று குறிப்பிட்டு தான் எழுதி வாங்கினேன் என்றால் சரிதான். அடமான பத்திரத்தில் எழுதிய செக்குபந்தி விவரம் என்றால் கிழக்கு, மேற்கு புறம்போக்கு நிலம், வடக்கில்

மாரியப்பன் நிலம் மற்றும் தெற்கில் சித்த கவுண்டர் நிலம் ஆகும். எவ்வளவு நிலம் என்றால் **2 ஏக்கர் 63 செண்ட்** ஆகும்.

(2) கடனை கட்டிய பிறகு நான் மேற்படி அசல் பத்திரங்களான அடமான பத்திரம், கிரைய பத்திரம், பட்டா, சிட்டா ஆகியவற்றை திரும்ப பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். அடமான பத்திரம் எழுதும் போது என்ன சர்வே எண் என்றால் **சர்வே எண்.296/2 ஏ 2** ஆகும். வடக்கு பக்கம் உள்ள சித்த கவுண்டருக்கு எவ்வளவு நிலம் என்றால் சர்வே **எண்.296/2 ஏ** மொத்த பரப்பளவு **4 ஏக்கர் 33 செண்ட்** என்றால் **5 ஏக்கர் 33 செண்ட்** ஆகும். இந்த சர்வே எண்ணில் சித்த கவுண்டர் எவ்வளவு நிலம் வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மாரியப்பன் எவ்வளவு வைத்துள்ளார் என்றால் **1 ஏக்கர் 70 செண்ட்** ஆகும். நான் எவ்வளவு இந்த சர்வே எண்ணில் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் 2 ஏக்கர் வாங்கியுள்ளேன். எப்போது வாங்கினேன் என்றால் 07.02.1996 தேதியில் வாங்கினேன். அக்கிரிமெண்ட் எவ்வளவு நிலத்திற்கு போடப்பட்டது என்றால் 3. 70 ஏக்கர் போடப்பட்டது. மேற்படி அக்கிரிமெண்டுக்கு முன்பே சித்தகவுண்டர் கிரையம் வாங்கிவிட்டார் என்றால் சரிதான். மேற்படி அக்கிரிமெண்டில் செக்குபந்திகள் குறிப்பிட்டுள்ளது என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி 3 ஏக்கர் 70 செண்டுக்கான செக்குபந்தி என்னவென்றால் அதே செக்குபந்தி தான், கிழக்கு, மேற்கில் புறம்போக்கு நிலம், தெற்கில் சித்த கவுண்டர் நிலம், வடக்கு மாரியப்பன் நிலம் அக்கிரிமெண்ட் தேதியில் மாரியப்பன் கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். மேற்படி 3 ஏக்கர் 70 செண்டிற்கு கிழக்கு, வடக்கு, மேற்கு புறம்போக்கு நிலம் தெற்கில் சித்தகவுண்டர் நிலம் என்பது தான்

செக்குபந்தி என்றால் சரிதான். மேற்படி அக்கிரிமெண்ட் யார் யார் எழுதி கொடுத்தார்கள் என்றால் பழனியப்பன் ஆகும். அந்த ஒப்பந்த பத்திரத்தில் அக்கிரிமெண்ட் எழுதி கொடுத்த பழனியப்பனுக்கு மீத நிலம் இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பழனியப்பனுக்கு 3 ஏக்கர் 70 செண்ட் மட்டும் தான் ஒப்பந்த பத்திர தேதியிலேயே பாத்தியம் என்றும் மீதம் நிலம் ஏரி புறம்போக்கு என்றும் அதனால் தான் செக்குபந்திகள் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(3) அசல் ஒப்பந்த பத்திரம், அடங்கல், அடமான பத்திரம் ஆகியவை என் வசம் தான் உள்ளது என்றால் சரிதான், அதை நீதிமன்றத்தில் ஒப்படைக்க தயராக உள்ளேனா என்றால் உள்ளேன். 2014ம் வருடம் எனது அனுபவத்தில் சித்த கவுண்டர் பாகத்திற்கு வடக்கு புறம் போக்குக்கு கிழக்கு மாரியப்பனுக்கு விற்ற பாகத்திற்கு தெற்கு புறம்போக்குக்கு மேற்கு இதன் மத்தியில் **சர்வே எண். 296/2ஏ** அதன் **புதிய சர்வே எண்.296/2ஏ2**ல் 2 ஏக்கர் என குறிப்பிட்டு தான் அடமானம் வைத்துள்ளேன் என்றால் சரிதான், ஆனால் 2 ஏக்கருக்கு மட்டும் தான் தேவைப்பட்டது. நான் சொல்லும் மீதம் உள்ள 63 செண்ட் எந்த திசையில் உள்ளது என்று அடமான பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எந்த நிலமும் இல்லை என்றும் மீத நிலம் ஏரி புறம்போக்காக தான் உள்ளது என்றும் அதனால் தான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, எனது பெயரில் பட்டா உள்ளது.

(4) மாரியப்பன் கிரையம் வாங்கிய **1 ஏக்கர் 70 செண்ட்** நிலத்தில் எனக்கு எவ்வித பாத்தியமும் உரிமையும் அனுபவமும் இல்லை என்றால் சரிதான். மாரியப்பன் கிரையம் வாங்கி **1 ஏக்கர் 70 செண்ட்** நிலத்திற்குபட்டா

வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதே நாளில் தான் எனக்கும் வழங்கப்பட்டது. மாரியப்பன் பெயரில் சிட்டா சரியாக உள்ளது என்றும் ஆனால் புல வரைபடத்தில் அளவுகள் குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மாரியப்பன் கிரையம் வாங்கி உட்பிரிவு செய்து பட்டா பெற்று அனுபவித்து வரும் **1 ஏக்கர் 70 சென்ட்** சொத்தில் எனக்கு எந்த உரிமையும் பாத்தியமும் இல்லை என்றால் சரிதான், நான் அதில் எதுவும் கோரவில்லை.

(5) எனது வழக்குரையில் எந்த செக்குபந்தி விவரமும் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் உண்மையான விவரங்கள் நீதிமன்றத்திற்கு தெரிந்துவிட கூடாது என்பதால் தான் செக்குபந்தி விவரங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் எந்த வருடம் எவ்வளவு தொகைக்கு பச்சயம்மாள் இடம் கிரையம் பேசினேன் என்று எந்த விவரமும் சொல்லவில்லை என்றால் சரிதான். எவ்வளவு விலை கொடுத்து வாங்கியதாக சொல்கிறேன் என்றால் **ரூ.45,000/-** வாங்கினேன். சாட்சி தற்போது ரூ.40,000/- என்று சொல்கிறார். மேற்படி 63 சென்டுக்கு என்ன செக்குபந்தி என்றால் 2 ஏக்கர் நிலத்துடன் சேர்ந்தது தான் அது, அதனுடைய செக்குபந்தி தான் இதுவும். எனது வழக்குரையில் மேற்படி 2 ஏக்கர் சொத்துடன் சேர்ந்தது தான் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் 63 சென்ட் நிலம் இல்லை என்றும் அது ஏரி புறம்போக்காக உள்ளது என்றும் அதனால் தான் மேற்படி விவரங்கள் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

(6) எனக்கு எந்த வருடம் கிரைய நிலத்திற்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் 2000 ம் ஆண்டு மனு கொடுத்தேன் 2001 பட்டா வழங்கப்பட்டது.

பட்டா மாறுதல் உத்தரவு ஏதாவது என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம் பட்டா தான் உள்ளது. **வா.சா.ஆ.1** கண்பிக்கப்பட்டு, 19.10.2014 ம் தேதி தான் **சர்வே எண்.296/2 ஏ 2** என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அது யூடீஆரில் பதிவேற்றம் செய்த தேதியாகும். **வா.சா.ஆ.2** காண்பிக்கப்பட்டு, எனது பட்டாவில் கிரையம் மூலம் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் கிரையம் மூலம் 2 ஏக்கரும் பட்டா மூலம் 63 சென்ட் பாத்தியமாகும். பட்டா அல்லது அனுபவ மூலம், அல்லது வாய்மொழி கிரையம் மூலம் 63 சென்ட் பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

(7) 14.09.2022 தேதியிட்ட புகார் மனு நகலை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் அதனை அவசரத்தில் நகல் எடுக்கவில்லை. **வா.சா.ஆ.10 ல்** நானாக திருத்தம் செய்தள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி புகார் மனுவை கொடுத்தால் உண்மை நிலை தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

(8) **குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-xxx

District Munsif
Uthangarai